DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.92/2018**

Cross Examination of Witness PW-1

09.10.2019

அசா.1 - ஜெயநிவாசன்

<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 11, 14, 15 மற்றும் 21 வது எதிரிகளுக்கான குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-</u>

22.08.2012 ம் தேதி நான் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் ஞானசேகரன் என்பவர் பற்றியோ அல்லது அவர் 12.08.2012 அன்று விடியற்காலை 4 மணிக்கு மேல் ராயப்பேட்டை சிக்னலுக்கு வந்ததாகவும், அங்கிருந்து அவர் உங்கள் அனைவரையும் வில்லிவாக்கத்தில் உள்ள அவரது மாமா வீட்டிற்கு அழைத்துச் சென்று அங்கு வினாத்தாள்களை ஸ்கேன் செய்து ஈரோட்டிற்கு மெயில் அனுப்பியதாகவும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். sathish_155@yahoo.com என்பதும், satheeskumar155@yahoo.com என்பதும், sathish155@yahoo.com என்ற Email ID கள் அனைத்தும் வெவ்வேறானவை என்றால், சரிதான். 23.09.2013 ம் தேதி அன்று JM 2 ஈரோடு நீதிமன்றத்தில் கொடுத்த குவிமுச 164 பிரிவின் கீழான வாக்குமூலத்தின் பக்கம் 3, கீழிருந்து மேலாக வரி 7 ல் Email ID யை தமிழில் சத்தீஸ்155@யாகு.காம் என்றுதான் சொல்லியுள்ளேன் என்றால், நான் சத்தீஸ்155@யாகு.காம் என்று கூறினேன் தவிர ஆங்கிலமா அல்லது தமிழா என்று அதை நான் குறிப்பிட்டுக் கூறவில்லை. 13.08.2018 ம் தேதி ஈரோடு JM 3 நீதிமன்றத்தில் நான் கொடுத்த சாட்சியத்தில் பக்கம் 6, கீழிலிருந்து மேலாக வரி 4 ல்

satheeskumar155@yahoo.com என Email IDயை சதீஸ்குமார் என்னிடம் சொல்ல, அதை நான் ஸ்ரீதர்ராஜிடம் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். நான் ஈரோடு JM2 மற்றும் JM3 ஆகிய இருநீதிமன்றங்களிலும் வெவ்வேறான Email ID யை கொடுத்து முரண்பட்ட தகவல்களை கொடுத்துள்ளேன் என்றால், சரிதான். 22.08.2012 அன்று நான் காவல்துறையினரிடம் கொடுத்த வாக்குமூலத்திலும், 23.09.2013 அன்று நான் ஈரோடு JM2 நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்திலும், 14.05.2014 மற்றும் 15.05.2014 அன்று நான் ஈரோடு CJM நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலங்களிலும், 13.08.2018 அன்று ஈரோடு JM3 நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்திலும் 24 வது எதிரி சதீஸ்குமார் என்பவரின் Email IDயை நான் பெற்று அதை 20 வது எதிரி ஸ்ரீதர்ராஜ் என்பவரிடம் நான் கொடுத்ததாக சொல்லப்படும் நிலையில் அந்த Email IDக்கான பாஸ்வேர்டு என்ன என்பதைப் பொறுத்து நான் எந்த இடத்திலும் கூறவில்லை என்றால், சரிதான். 07.08.2019ம் தேதி இந்நீதிமன்றத்தில் முதல் விசாரணை அளித்தநிலையிலும் Email IDக்கான பாஸ்வேர்டுயை நான் கூறவில்லை என்றால், சரிதான். 2005 முதல் 2008 வரை சென்னையிலுள்ள குருநானக் கல்லூரியில் BCA பட்டப்படிப்பு படித்தேன் என்றால் சரிதான். நான் தற்போது HCL கம்பியூட்டர் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன் என்றால், சரிதான். Email IDயை கம்பியூட்டரில் ஓபன் செய்து பார்ப்பதற்கும், அதை மற்றவர்களுக்கு அனுப்பி வைப்பதற்கும் அந்த Email IDயின் பாஸ்வேர்டு கட்டாயம் தெரிந்திருக்கவேண்டும் என்றால் சரிதான். பாஸ்வேர்டு தெரியாத நிலையில், சதீஸ்குமார் என்பவரின் Email IDயை வைத்து, நான் முதல் விசாரணையில் கூறியுள்ளதுபோல் அந்த Email லில் உள்ளடங்கிய தகவல்களை

ஓபன் செய்யவோ, மற்றவர்களுக்கு அனுப்பிவைக்கவோ அறிவியல்பூர்வமாக சாத்தியப்படாத ஒன்று என்றால் சரிதான். அந்த Email ID யை பொறுத்தவரை தடயஅறிவியல் துறையின் கருத்தினைப்பெற்று, அதனடிப்படையில் என்னிடம் காவல் துறையினர் விசாரித்து, வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் 11 மற்றும் 14 ஆகிய இரு எதிரிகளும் எனக்கு முன்பின் அறிமுகம் இல்லாத நபர்கள் என்றால், சரிதான். நான் பெற்றதாக கூறிய வினாத்தாள்கள் எத்தனை பக்கங்கள் கொண்டது என்றால், எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. 18.08.2012 முதல் 21.08.2012 ம் தேதி வரை நான் காவல் துறையினரின் விசாரணையில் இருந்தபோது, ஈரோடு ADSP எனது Email ID, செல்போன் எண் மற்றும் Facebook ஆகிய விவரங்களை கேட்டு அறிந்தாரா என்றால், இல்லை. செல்போன் எண்ணை மட்டும் கேட்டு அறிந்து கொண்டார். 18.08.2012 முதல் 21.08.2012 ம் தேதி வரை நான் காவல் துறையினரின் விசாரணையில் இருந்தபோது, ஈரோடு ADSP யிடமோ அல்லது வேறு காவல் அதிகாரியிடமோ நான் ஒப்புதல் வாக்குமூலம் ஏதேனும் கொடுத்தேனா என்றால், இல்லை. 18.08.2012 முதல் 21.08.2012 ம் தேதி வரை நான் காவல் துறையினரின் விசாரணையில் இருந்தபோது, எனது செல்போன் எனது வசமே இருந்தது என்றால், எனது செல்போனை காவல் துறையினர் பெற்றுக் கொண்டனர். எனது செல்போனில் Contacts என்ற வசதியிருந்தது என்றால், சரிதான். அதில் எனக்கு வேண்டியவர்களின் பெயர், தொடர்பு எண்ணை பதிவு செய்து வைத்திருந்தேன் என்றால் சரிதான். பொதுவாக Contacts ல் செல்போன் எண்களை பெயர் கொடுத்து பதிவு செய்யாதபோது, வெறும் செல்போன் எண்கள் மட்டுமே அழைப்பின்போது தெரியும் என்றால், சரிதான். செல்போன்

எண்ணிற்கான பெயர் பதிவு செய்யப்பட்டிருந்தால், அந்த செல்போன் எண்ணைப் பயன்படுத்தும்போது Contacts ல் உள்ள அதற்குரிய பெயர் மட்டுமே வெளியே தெரியும் என்றும், செல்போனுக்குரிய எண்கள் தெரியாது என்றும் சொன்னால் சரிதான். 18.08.2012 முதல் 21.08.2012 ம் தேதி வரை நான் காவல் துறையினரின் விசாரணையில் இருந்தபோது, ஈரோடு ADSP விசாரித்தபோதும், மற்ற அதிகாரிகள் விசாரித்தபோதும், எனது செல்போனில் பதிவாகி உள்ள உள்வெளி அழைப்புகள் குறித்து என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. CBCID என்னை விசாரித்தபோது Call Detail விவரங்களை வைத்து என்னை விசாரித்தனரா என்றால், அதுபற்றி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. CBCID விசாரணையில் Call Details ல் உள்ள செல்போன் எண்களில் குறிப்பிட்ட ஏதேனும் செல்போன் எண்களை வைத்து என்னை விசாரித்தனரா என்றால், இல்லை. 07.07.2012 க்கு பிறகு ஸ்ரீதர்ராஜை எந்த தேதியில், எங்கு வைத்துப் பார்த்தேன் என்ற விவரங்களை 3 முறை நீதிமன்றங்களில் வாக்குமூலம் கொடுத்தபோதும் கூறவில்லை என்றால், சரிதான். 11.08.2012 ம் தேதிக்கு முந்தைய நாள் பகல் நேரத்தில் 23 வது எதிரி மோகன்பாபு என்பவரிடமிருந்து அழைப்புகள் ஏதேனும் வந்ததா என்றால், இல்லை. அன்றைய தினம் இரவு 10.30 மணிக்கு எனக்கு அழைப்பு வந்தது. 18.08.2012 முதல் 21.08.2012 ம் தேதி வரை நான் காவல் துறையினரின் விசாரணையில் இருந்தபோது, 23 வது எதிரி மோகன்பாபுவின் அழைப்பை பொறுத்து ஈரோடு ADSP என்னிடம் விசாரணை எதுவும் செய்யவில்லை என்றால், சரிதான். 21.08.2012 ம் தேதி சென்னையிலிருந்து, யார்யார், என்ன வாகனத்தில், எத்தனை மணிக்கு ஈரோடுக்கு புறப்பட்டோம் என்றால், நானும், 24 வது எதிரி

சதீஸ்குமாரும், 23 வது எதிரி மோகன்பாபுவும், காவல்துறையின் Tempo Traveler வாகனத்தில் கிளம்பினோம். எத்தனை மணிக்கு கிளம்பினோம் என்பதும், காவலர்கள் யார்யார் உடன் வந்தார்கள் என்பதும் ஞாபகம் இல்லை . ஈரோடு ADSP வந்தாரா என்றால், அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. அன்றைய தினம் நாங்கள் கிளம்பியது காலைப்பொழுதா, மதியமா அல்லது இரவுப்பொழுதா என்றால், இரவில்தான் சென்னையிலிருந்து கிளம்பினோம். அப்போது சென்னையில் நான் தங்கவைக்கப்பட்டிருந்த விடுதி அறையை காலி செய்துதான் கிளம்பினோம் என்றால், சரிதான். விடுதி அறைக்கான செலவுத்தொகையை யார் செலுத்தினார்கள் என்றால், அதை நான் செலுத்தவில்லை. ஆனால் யார் செலுத்தினார்கள் என்று எனக்கு தெரியாது. காவல் துறையினர் என்னை வைத்திருந்த விடுதியின் பெயர், விலாசம் மற்றும் விடுதியில் நான் தங்க வைக்கப்பட்டிருந்த அறையின் எண் ஆகியன எனக்கு தெரியுமா என்றால், அவை யாவையும் எனக்கு தெரியாது. 18.08.2012 முதல் 21.08.2012 ம் தேதி வரை சட்டவிரோத காவலில் நான் வைக்கப்பட்டிருந்தபோது காவல் துறையினர் என்னை அடித்தனரா என்றால், இல்லை. காவல் துறையினர் என்னை சென்னையிலிருந்து ஈரோடு அழைத்து வரும்போது என்னை அடிப்பார்களா என்ற பயம் எனக்கு இருந்ததா என்றால், அவ்வாறான பயம் எனக்கு எதுவும் இல்லை. 22.08.2012 ம் தேதி எத்தனை மணிக்கு ஈரோடு வந்து சேர்ந்தோம் என்றும், அங்கு என்னை எங்கு வைத்திருந்தார்கள் என்றால், எத்தனை மணிக்கு ஈரோடு வந்து சேர்ந்தோம் என்று எனக்கு நினைவில்லை. ஆனால் ஏதோ ஒரு காவல் நிலையத்தில் வைத்திருந்தார்கள். எந்த ஊரில் உள்ள காவல் நிலையம் என்று எனக்கு ஞாபகம் இல்லை. 22.08.2012 ம் தேதி ஈரோடு

JM2 நீதிமன்றத்தில் நான் நீதிமன்ற அடைப்புக்காவலுக்காக ஆஜர்படுத்தப்பட்டபோது, இந்த வழக்கில் நான் சம்பந்தப் படவில்லை என்பதையும், காவல் துறைக்கு எதிராக எவ்வித புகாரும் நீதிமன்ற நடுவரிடம் கூறவில்லை என்றால், சரிதான். ஈரோடு JM2 நீதிமன்றத்தில் நான் நீதிமன்ற அடைப்புக்காவலுக்காக ஆஜர்படுத்தப்பட்டபோது, 18.08.2012 முதல் 21.08.2012 ம் தேதி வரை சட்டவிரோத காவலில் நான் வைக்கப்பட்டிருந்ததைப் பொறுத்து நான் புகார் எதுவும் சொல்லத்தோன்றவில்லை, சொல்லவும் இல்லை என்றால், சரிதான். நீதிமன்ற அடைப்புக்காவலுக்கு உட்படுத்தும்போது, 18.08.2012 முதல் 21.08.2012 ம் தேதி வரை சட்டவிரோத காவலில் நான் வைக்கப்பட்டிருந்ததைப் பொறுத்து நான் புகார் எதுவும் கூறக்கூடாது என்று காவல்துறையினர் அறிவுறுத்தினார்களா என்றால், அவ்வாறு என்னை அறிவுறுத்தவில்லை. காவல் துறையினர் என்னை கைது செய்தபோது, நான் தவறு செய்துவிட்டதாக எனக்கு தோன்றவில்லையா என்றால், தவறு செய்துவிட்டதாக எனக்கு தோன்றியது. பொதுவாக சட்டத்திற்கு புறம்பான செயல்கள் எதுவும் செய்யக்கூடாது என்றும், அவ்வாறு செய்தால் அதற்குரிய தண்டனை கிடைக்கும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியும். இவ்வழக்கில் நான் வழக்கறிஞர் மூலமாக பிணைய மனு தாக்கல் செய்து, பிணையம் பெற்று ஜாமீனில் வெளியில் வந்துள்ளேன் என்றால் சரிதான். பிணைய மனு தாக்கல் செய்தபோது, நான் இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவன் என்று கூறாமல், நான் குற்றம் எதுவும் செய்யாத அப்பாவி என கூறிதான் பிணைய மனு தாக்கல் செய்தேன் என்றால், அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. எனக்காக பிணைய மனு தாக்கல் செய்த வழக்கறிஞர் பெயர் என்ன

என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. முதன்முதலாக பிணைய மனு தாக்கல் செய்தபோது, நான் கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் எனது வழக்கறிஞர் பிணைய மனுதாக்கல் செய்தார் என்றால், சரிதான். நான் தாக்கல் செய்த பிணைய மனுவில், நான் குற்றச்செயலில் ஈடுபடாதவர் என்றும், நான் அப்பாவி என்றும் கூறித்தான் மனுதாக்கல் செய்துவிட்டு, தற்போது வழக்கிற்காக மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. 22.08.2012 முதல் 22.10.2012 வரை நான் நீதிமன்றக் காவலில் இருந்தேன் என்றால், சரிதான். 22.08.2012 முதல் 22.10.2012 வரையுள்ள 60 நாட்கள் நான் நீதிமன்றக் காவலில் இருந்தபோது, உதவி ஆய்வாளராக இருந்த எனது அப்பா என்னை எத்தனை முறை சிறையில் வந்து பார்த்தார் என்றால், சிறைக்கு வந்து பார்த்தார். எத்தனை முறை என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனது அப்பா என்னைப் பார்த்த காலகட்டத்தில் நான் குற்றச் செயலில் ஈடுபட்ட நபர் என்றும், நான் குற்றத்தை ஒப்புக்கொள்கிறேன் என்றும் எனது அப்பா வழியாக ஏதேனும் தகவல் கொடுத்தேனா என்றால், இல்லை. நீதிமன்ற அடைப்புக் காவலில் சிறையில் இருந்த போது, சிறை அதிகாரியிடம் நான் குற்றச் செயலில் ஈடுபட்ட நபர் என்றும், நான் குற்றத்தை ஒப்புக்கொள்கிறேன் என்றும் ஏதேனும் தகவல் கொடுத்தேனா என்றால், இல்லை. நான் கொடுத்த தகவலின் அடிப்படையில் ஈரோடு வழக்கறிஞர் திரு.சி. நல்லசிவம் என்பவர் எனக்கு பிணைய மனு தாக்கல் செய்தார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் சி.எம்.பி.5654/2012 பிணைய மனுவானது எனக்காக வழக்கறிஞர் திரு.சி. நல்லசிவம் தாக்கல் செய்தது என்றால், சரிதான். அந்த பிணைய மனு எ.த.சா.ஆ.1 ஆகும். அந்த மனு எனக்காகவும், சதீஸ்குமார்

என்பவருக்காகவும் வேண்டி சேர்ந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி எ.த.சா.ஆ.1 பிணைய மனுவில் "The petitioners are innocent and not guilty of any offence" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். தொடர்ந்து 60 நாட்கள் சிறையில் இருந்தபோது நீதிமன்றக் காவல் நீட்டிப்பிற்காக ஒவ்வொரு முறையும் நான் நடுவர் முன் ஆஜர் செய்யப்பட்ட சமயங்களிலும், நான் இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவன் என்றும், எனவே அதனை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் அளிப்பதாக நான் எந்த நேரத்திலும் கூறவில்லை என்றால், சரிதான். 60 நாட்கள் கழித்து நீதிமன்றத்தில் கையொப்பமிடவேண்டும் என்ற நிபந்தனை ஜாமீனில் வெளியே வந்த நான், நீதிமன்றத்தில் நிபந்தனை கையொப்பம் செய்த நாட்களில், நான் இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவன் என்றும், எனவே அதனை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் அளிப்பதாக நான் எந்த நேரத்திலும் நீதிமன்ற நடுவரிடம் கூறவில்லை என்றால், சரிதான். நான் குவிமுச 437 பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து பிணைய மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த குவிமுச 437 பிரிவின் கீழான அனைத்து பிணைய மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன என்றும், எனவே கட்டாய ஜாமீன் என்ற நிலையில் குவிமுச 167(2)ன் கீழான பிணைய மனுவில்தான் நான் பிணையில் வந்தேன் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. ஜாமீன் உத்தரவிற்கான நிபந்தனை தளர்வு செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களிலும் "The petitioners are innocent and not guilty of any offence" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது. எனது பிணைய மனு மற்றும் நிபந்தனை தளர்வு மனுக்களில்

என்னை அப்பாவி எனவும், குற்றச்செயலோடு தொடர்பற்றவன் என்றும் குறிப்பிட்டுவிட்டு, தற்போது அதை மாற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. CBCID யின் தலைமை அலுவலகம் சென்னையிலுள்ள என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. ஈரோட்டில் நிபந்தனை கையொப்பம் செய்தபோது நான் எங்கிருந்தேன் என்றால், ஈரோடு ரயில்வே குவார்ட்டர்சில் எனக்கு தெரிந்தவர்கள் வீட்டில் தங்கியிருந்தேன். சென்னையில் எனது வீடு எங்குள்ளது என்றால், எக்மோரில் உள்ளது. எக்மோரில் மெட்ரோபாலிட்டன் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள் உள்ளது என்றால், நீதிமன்றங்கள் உள்ள விபரம் எனக்கு தெரியும். எக்மோரிலுள்ள நீதிமன்றங்களுக்கும், எனது வீட்டுக்கும் எவ்வளவு தூரம் என்றால், தூரம் குறிப்பிட்டு தெரியாது. 10 நிமிடங்களில் செல்லக்கூடிய தூரம் தான். நிபந்தனை ஜாமீனுக்கு பிறகு, 22.10.2012 முதல் 20.09.2013 க்குள் நான் குற்றத்தை ஒப்புக்கொண்டு அப்ரூவராக மாற உள்ளேன் என்று வீட்டின் அருகாமையில் உள்ள எக்மோர் மெட்ரோபாலிட்டன் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேனா என்றால், இல்லை. நிபந்தனை ஜாமீனுக்கு பிறகு, 22.10.2012 முதல் 20.09.2013 க்குள் நான் குற்றத்தை ஒப்புக்கொண்டு அப்ரூவராக மாற உள்ளேன் என்று சென்னையில் எனக்கு தெரிந்த வழக்கறிஞர் யாரேனிடம் தகவல் கூறினேனா என்றால், எனது வழக்கறிஞர் நண்பர் திரு. விஜயகுமார் என்பவரிடம் இதைப்பற்றி கூறியுள்ளேன். எந்த தேதியில், எங்கு சந்தித்து விஜயகுமாரிடம் இதைப்பற்றி கூறினேன் என்றால், பிணையில் வந்த 6 மாதத்திற்குள் இதைப்பற்றி எனது நண்பர் விஜயகுமாரிடம் கூறினேன். 6 மாதம் என்பது பிணையிலிருந்துவெளியே வந்த காலமா அல்லது நிபந்தனைக்கு

பிணையத்திற்கு பின்னிட்ட காலமா என்றால், பிணையில் வந்த 6 மாதம் கழித்துதான் நான் எனது வழக்கறிஞர் நண்பர் விஜயகுமாரை சந்தித்து இதைப்பற்றி கூறினேன். நான் கூறிய பிறகு, எனது வழக்கறிஞர் நண்பர் விஜயகுமார், CBCID தலைமை அலுவலகத்திற்கோ அல்லது ஏதேனும் நீதிமன்றத்திற்கோ என்னை அழைத்துச் சென்று ஏதேனும் மனு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரிதான். நான் RPF SI யின் மகன் என்பதால், நான் சட்டத்திற்குட்பட்டுதான் நடக்கவேண்டும் என்றும், சட்டத்திற்கு முரணான வகையில் நான் நடக்கக்கூடாது என்றும், எனது தகப்பனார் என்னை கண்டிப்புடன் நடத்தினார் என்றால், சரிதான். பெங்களூர் சென்று, ஏர்டெல் போர்டு வைத்திருந்ததற்கு அருகே உள்ள கட்டிடத்திற்கு சென்று, 2 மணிநேரம் தேர்விற்காக படித்தபோது, அவ்வாறு செய்தவற்கு முன்பு, அந்த செயல் சட்டத்திற்கு முரணானதுதானா என்று யோசித்தேனா என்றால், நான் யோசிக்கவில்லை. நான் செய்யக்கூடிய செயல் சட்டத்திற்கு புறம்பானது என்று எனக்கு தெரிந்திருந்தால், நான் அதை செய்திருக்கமாட்டேனா என்றால், நான் அதை செய்திருக்க மாட்டேன். நான், எனது 7 வயதிற்கு பின்னிட்ட காலத்தில், எப்போதாவது சட்டத்தை மீறும் பழக்கம் கொண்டிருந்தேனா என்றால், இல்லை. பெங்களூர் சென்று குரூப்4 தேர்விற்கு படித்த காலகட்டத்தில் எந்த ஆண்டு சட்டத்தை மீறலாம் என்று எனக்கு தோன்றியது என்றால், சட்டத்தை மீறும் எண்ணம் எனக்கு தோன்றியதில்லை. நீதிமன்றக்காவலில் இருந்த 60 நாட்களில் போலீசார் என்னை காவல்துறைக் காவலுக்கு உட்படுத்த ஏதேனும் மனுதாக்கல் செய்தனரா என்றால், இல்லை.

(ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வேண்டி எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியின் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)